දිස්ත්‍රික් ලේකම් කාර්යාලය - අම්පාර

மாவட்ட செயலகம் - அம்பாறை

District Secretariat - Ampara

2019

වාර්ෂික කාර්යය සාධන වාර්තාව හා ගිණුම්

வருடாந்த செயலாற்று அறிக்கையும் கணக்கறிக்கையும்

Annual Performance Reports & Accounts

உள்ளடக்கம்

தொ.இல	விபரம்	பக்க இல
1.1	புதுமை மிக்க சமுதாயத்தினைக் கொண்ட வளம்மிக்க அம்பாறை மாவட்டம்	**01-04**
1.2	அம்பாறை மாவட்ட செயலகத்தின் நோக்கு இலக்கு மற்றும் செயற்பாடுகள்	**05**
1.3	அம்பாறை மாவட்ட செயலகத்தின் நிருவாக மற்றும் நிருவாக இணைப்பு பிரிவின் கடைமைப் பொறுப்புகள்	**06**
1.4	பிரிவு மாவட்ட செயலகத்தினுடைய ஒழுங்கமைப்பு அட்டவணை	**07**
1.5	மாவட்ட செயலகமும் மற்றும் நிறுவனங்களும்	**08**
1.6	மாவட்ட செயலத்தின் கீழ் உள்ள கிராம உத்தியோகத்தர்	**09**
1.7	வெளிநாட்டு நிதியீட்டத்திலான விபரங்கள்	**09**
02.	2019 முன்னேற்ற மற்றும் எதிர்கால கண்ணோட்டம்	**10-11**
03. 3.1.	2019 டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகைச் கூற்று	**12**
3.3.	2019 டிசம்பரில் உள்ளவாறான நிதி நிலமைக் கூற்று	**13**
3.4.	2019 டிசம்பரில் உள்ளவாறான நிதி நிலமைக் கூற்று	**14**
3.5.	நிதிக் கூற்றுக்கான குறிப்புக்கள்	**15**
3.6.	வருமான சேகரிப்பு செயலாற்றுகை	**16**
3.7.	2019 டிசம்பர் 31 இல் முடிவுற்ற நிகழ்ச்சித்திட்டத்தின் மூலமான செலவினங்கள்	**17**
3.8.	நி.பி குறிப்பு 208 பிரகாரம் ஏனைய அமைச்சுக்கள்	**18-19**
3.9.	நிதி அல்லாத சொத்து அறிக்கையிடல் செயலாற்றுகை	**20**
3.10.	கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை	**21-26**
04. 4.1	நிறுவனத்தின் செயலாற்றுகை	**27**
05. 5.1.	பேண்தகு அபிவிருத்தி இலக்குளை (SDG) அடையும் செயலாற்றுகை	**28-30**
5.2.	**பேண்தகு அபிவிருத்தி இலக்குகளின் அடைவுகள் மற்றும் சவால்களை சுருக்கமாக விபரிக்க**	**31**
06.	மனிதவள விபரம்	
6.1.	பதவியணி முகாமைத்துவம்	**32**
6.2.	பற்றாக்குறையான அல்லது அதிகப்படியான மனித வளங்கள் நிறுவனத்தின் செயலாற்றுகை	**32**
6.3.	மனிதவள அபிவிருத்தி	**33**
07.	இணக்கப்பாட்டு அறிக்கை	**34-39**

அரசாங்க அதிபரின் செய்தி

அம்பாறை மாவட்ட செயலகத்தில் ஆற்றப்படுகின்ற 2019 ஆம் ஆண்டில் சேவைகள் மற்றும் மேற்கொள்ளப்படுகின்ற செயற்திட்டங்களுக்குக்மைய வருடாந்த செயலாற்றுக்கை அறிக்கையை முன்வைப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன். 2002.09.12 ஆம் திகதிய 402 ஆம் செயலகங்களின் நிதிச் சுற்றறிக்கைக்கு அமைய அம்பாறை மாவட்ட செயலகம் மற்றும் பிரதேச செயலகங்களின் நிதி கட்டுப்பாட்டை அடிப்படையாக் கொண்டு இவ் அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது.

1961 ஆம் ஆண்டில் நிர்வாக மாவட்டமாக உருவாக்கப்பட்ட அம்பாறை மாவட்ட வரலாற்றில் அரைவாசியளவில் ஏற்பட்ட யுத்த கறுப்பு ஞாபகங்களிலும் இரத்தக் கரையிலும் நிரம்பியுள்ளது. தேசத்தின் அபிவிருத்தியில் முடக்கப்பட்டிருந்த அக் காலப்பகுதியில் புதிய பலமொன்றில் வரையில் பொறிமுறை இது முன்சென்று கொண்டிக்கின்றது.

சிங்கள ,தமிழ், முஸ்லிம் சகல இனங்களுக்கும் உரித்தான மக்கள் ஒன்றாக வாழ்கின்ற அம்பாறை பல்மத, பல்லின, கலாச்சார இன ஒருமைப்பாட்டைக் கொண்டது பொருளாதார மற்றும் சமூக மக்களுக்கு இம் மக்களுக்கும் நம்பிக்கயுடனும் ஒருவரயொருவர் போற்றிக்கொண்டு வாழக்கூடிய சூலொன்றை இம் மாவட்டத்திற்குள் உருவாக்குதல் எம் அனைவரினதும் முன்னனி அபிலாசையாக வேண்டும்.

இந் நாட்டில் நெல் அறுடைக்கு உரிமை கோருகின்றதும், தொடர்ச்சியான வருடாந்த கௌப்பி உற்பத்தியில் இலங்கையின் முன்னனி மாவட்டமான அம்பாறை, தேசிய விவசாய உற்பத்தியில் அதிகளவான பங்கிற்கு உரிமை கோரப்படும் மாவட்டமாகும். உவர் நீர் மற்றும் நன்னீர் மீனவக் கைத்தொழிலும் வெற்றிகரமாக மேற்கொள்ளப்படுகின்ற பல்வேறு இயற்கை வளங்களினால் நிரம்பிய இம் மாவட்ட மக்களின் பெரும்பாலானவர்கள் விவசாயத்தை வாழ்வாதாரமாகக் கொண்டவர்கள் ஆவர்.

இங்குள்ள நூறாயிரம் மக்களின் வாழ்க்கையை ஆரோக்கியமும் மகிழ்ச்சியுடையதாகவும் செய்து அவர்களுக்கு மிகவும் சிறந்த எதிர்காலத்தை உரித்தாக்கிக் கொடுப்பதற்காக அரச கொள்கைகள் வினைத்திறனாக செயற்படுத்தும் அதிபரான பொறுப்பு எம்மிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இச் செயலாற்றுகை அதன் பொறுப்பை ஆற்றும் போது அறிக்கையில் குறிப்பிட்டுள்ள நோக்கத்தை பூர்த்திசெய்வதற்கு நிர்வாக விடயங்களுக்கு தேவையான உபதேசம் வழங்கிய மாவட்டத்தின் சர்வமத தலைவர்களுக்கும், ஒத்துழைப்பு வழங்கிய அரசியல் தலைவர்களுக்கும், அரச நியாதிக்க சபை மற்றும் அரச சார்பற்ற தாபனங்களின் தலைவர்களுக்கும் எனது நன்றிகள் உரித்தாகட்டும். அரச சேவைகள் கீழ் மட்டத்திற்கு பரவிச் செல்லும் போது பெரிதும் முக்கியமான கடமை பொறுப்பு ஆற்றப்படுவது பிரதேச செயலகத்திலிருந்தாகும் அலுவலக அவ் முறைமைகளுக்கிடையே ஒருங்கினைப்பு மற்றும் முகமைத்துவத்தை மேற்கொண்டு கடந்த வருடத்தில் எமது இலக்குகளை அடைந்து கொள்வதற்கு உச்ச பங்களிப்பை வழங்கிய மேலதிக மாவட்ட செயலாளர், பிரதான கணக்காளர், பணிப்பாளர் (திட்டமிடல்) மற்றும் ஏனைய பணிப்பாளர்கள், மாவட்ட பொறியிலாளர்கள், பிரதான உள்ளக கணக்காளர்கள். நிர்வாக உத்தயோகத்தர் உட்பட சகல பணித்தொகுதியினருக்கும் மாவட்டத்தின் பிரதேச செயலாளர்கள் அவ் அலுவலகரின் பதவி நிலை உத்தியோகத்தர்கள் உட்பட சகல பணித்தொகுதியினருக்கும் எனது பாராட்டினை தெரிவிக்கின்றேன்.

டீ.எம்.எல்.பண்டாரநாயக்க
மாவட்ட அதிபர், மாவட்ட செயலாளர்,
அம்பாறை மாவட்டம்.

1.1 புதுமை மிக்க சமுதாயத்தினைக் கொண்ட வளம்மிக்க அம்பாறை மாவட்டம்

பழைய திகாமடுல்ல மக்கள் குடியேற்றத்திற்கு உட்பட்டதான தற்போதைய அம்பாறை மாவட்டமானது இலங்கையின் கிழக்கு மாகாணத்தில் அமைந்துள்ளது. இப்பூமியானது இடத்துக்கிடம் மலை செறிந்துள்ள தரையாக உள்ளது. இத் தரையானது கடல் மட்டத்திலிருந்து பொதுவாக 200 அடி வரையிலும், மலை உச்சியிலிருந்து 1000 அடி உயரத்திலும் அமைந்துள்ளது. இது உண்மையிலேயே சகல வளம் நிறைந்த பூமிப் பிரதேசமாக உள்ளது. ஊவாவின் மலைத்தொடரின் மேலால் சூழ்ந்துள்ள இருள் நிறைந்த திரையுடன் ஆரம்பித்து கிழக்கின் கரையோரம் வரைக்கும் தொடர்ச்சியான வயல் நிலமாகும். இப் பிரதேசமானது மனதைக் கவரும் காட்சிகளை காட்டி மிளிர்ந்து கொண்டிருக்கிறது. உரிய காலத்தில் பெய்யும் மழை நீரானது நிறைந்து களப்புப் பிரதேசத்தை அழகு படுத்துகின்றது. தென்மேல் பருவப்பெயர்ச்சிக் காற்று வீசும் போது செடிகள் வேளாண்மையால் மூடப்பட்டு பசுமை நிறைந்த சமுத்திரத்தின் அழகை வெளிக்காட்டுகின்றது.

வேளாண்மை வளர்ந்து வரும்போது சிங்களவர், தமிழர், மற்றும் முஸ்லிம் விவசாயிகளின் பறன்கள் வயல் புறங்களில் இடத்துக்கு இடம் தோற்றம் பெறுகின்றது. வயல்களில் உள்ள வேளாண்மைகள் முற்றி வரும் போது தூரத்தில் உள்ள காடுகளில் இருந்து வரும் யானைகள், பன்றிகள், மயில்கள் போன்ற காட்டுப் பிராணிகளை காண முடியும் மீண்டும் அறுவடையை மேற்கொண்ட பின்னர் இப்பூமியானது ஆடுகள், எருமைகள், மாடுகள், போன்றவை கூட்டம் கூட்டமாக நிறைந்து அழகான காட்சியைக் கொடுக்கின்றது. உலர் காலமாகிய ஆவணி மாதம் ஆகும் போது சூரிய ஒளி முழுவதும் இப்பூமியில் பட்டால் எந்தவொரு பிராணிக்கும் புல் தரையில்லாத கடினமான நிலமாக வேகமான காற்று வீசி முழுப் பிரதேசமும் புழுதியால் சூழப்பட்ட பிரதேசமாக மாறிவிடும்.

மட்டக்களப்பு மாவட்ட செயலாளரின் கீழ் நாட்டிலுள்ள அதிகாரிகளினால் நிர்வாக கடமைகள் மேற்கொள்ளப்படும் இப்பூமி பிரதேசத்தில் 1924 ஆம் ஆண்டில் வேவ்கம்பத்துவ எனும் புதிய நிருவாக பிரிவு நிறுவப்பட்டது. வாத்தாவ என்பவர் அப்பிரிவின் முதலாவது தலைவராக இருந்ததுடன் புராதன நீர்ப்பாசன வேலைகள் மீண்டும் புனர்நிர்மானம் செய்யும் வேலைகளை அக்காலத்தினுள் மேற்கொள்ளப்பட்டது. அவ்வாறு ஆரம்பிக்கப்பட்ட அபிவிருத்தியின் களைகட்டலை உறுதிப்படுத்தி டி.எஸ்.சேனநாயக்கா என்பவர் கல்ஓயா அபிவிருத்தி வேலைத்திட்டத்தை ஆரம்பித்தார்.

இவ் விவசாய குடியேற்றத் திட்டத்தின் சிறந்த படைப்பு அம்பாறை மாவட்டமாகும். வேவ்கம்பத்துவ, பின்தன்பத்துவ, பாணம்பத்துவ, சம்மாந்துறைப்பத்துவ, நிந்தவூர்பத்துவ, அக்கரைப்பற்று உள்ளடங்கலாக பழைய நிர்வாக அலகுகளை ஒன்றுசேர்த்து 1961ம் ஆண்டில் அம்பாறை என்ற பெயரில் தனியொரு நிருவாக மாவட்டமாக நிறுவப்பட்டது. 1961ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 1ம் திகதி திரு.ஜே.டி.எஸ்.டி.லியனகே என்பவர் இதன் முதலாவது அரசாங்க அதிபராக நிருவாகப் பணிகளை ஆரம்பித்தார் 1980ம் ஆண்டில் மகாவலி அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் கீழ் மகாவலி சி வலயமான தெஹியத்தகண்டி பிரதேசம் இம் மாவட்டத்துடன் இணைத்துக் கொள்ளப்பட்டது.

தற்போதைய அம்பாறை மாவட்டமானது சம்மாந்துறை, கல்முனை, பொத்துவில், அம்பாறை ஆகிய தொகுதிகளையும், 20 பிரதேச செயலக பிரிவுகளையும், 503 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளையும் மற்றும் 614 கிராமங்களையும் உள்ளடங்கியதாக உள்ளது. அதில் **2** மாநகரசபையும் 1 நகரசபையும் 17 பிரதேச சபையும் 14 பொலிஸ் நிலையங்களும் உள்ளன. 115 கி.மீ தூரத்தினைக் கொண்ட அழகு மிக்க கடற்கரையும் இடத்துக்கிடம் அமைந்துள்ள. மலைக்குன்றுகளும் ஊருக்கு ஊர் அமைந்துள்ளன. ஆறுகள், குளங்கள் ஊடாக வரும் நீரினால் செழிப்புற்று வளரும் வயல் வெளி நிலங்கள் வனவிலங்குகள் சுதந்திரமாக நடமாடக்கூடிய காடுகளும் இவ் மாவட்டத்தின் அழகினையும் பெறுமதியினையும் மேலோங்கச் செய்கின்றது. இம் மாவட்டத்தின் பல்லினமத, பல்லின கலாச்சாரத்தினை வெளிக்கொணரும் 199 விகாரைகளும், 186 இந்து ஆலையங்களும், 338 முஸ்லிம் பள்ளிவாயல்களும், 66 கிறிஸ்தவ தேவாலயங்களும் உள்ளன.

சனத்தொகை புள்ளி விபர தகவல்களுக்கு ஏற்ப கடந்த வருடத்தில் அம்பாறை மாவட்டத்தில் சனத்தொகையானது 719,462 ஆகும் குடும்பங்களின் எண்ணிக்கை 205,211 ஆகும். இந்த முழுச் சனத்தொகையில் 44% முஸ்லிம்களும், 38.4% சிங்களவர்களும், 17.1% தமிழ் மக்களும் ஏனைய இனத்தவர் 0.5% ம் வாழ்வதுடன், இங்கு சகல இனத்தவர்களும் ஒற்றுமையுடனும், சகவாழ்வுடனும் வாழ்ந்து வருகின்றனர். இம் மாவட்டமானது 449,539.10 ஹெக்டயர் அளவினை கொண்டுள்ளதுடன் (154 சதுரகிலோ மீற்றர்களை) கொண்டுள்ளது. இம் மாவட்டத்தின் பயிர் நிலங்களின் அளவு 159,208.20 ஹெக்டாயர் ஆகும் முழு நகரப் பிரதேசங்களாக 11,243,30 ஹெக்டாயரும் நீர் தேக்கங்கள் 28,569.20 ஹெக்டாயரும் ஈரப்பதனுள்ள நிலங்கள் 2,212.60 ஹெக்டாயரும் வனாந்தரங்களின் எண்ணிக்கை (Forest & Range Land) 227,005.40 ஹெக்டாயரும் உள்ளன மக்கள் குடியேற்றப் பிரதேசமாக 21,300.40 ஹெக்டாயர் அளவிலும் உள்ளன. இம் மாவட்டத்தின் வருடாந்த மழை வீழ்ச்சியாக 1886 மில்லி லீற்றர் மழைவீழ்ச்சி கிடைக்கப் பெறுவதுடன் பொதுவான வெப்பநிலை 29.81 செல்சியஸ் மட்டத்தில் உள்ளது.

நாட்டின் மிகப்பெரிய நீர்தேக்கமான சேனநாயக்கா சமுத்திரத்தை அண்டிய நீர்ப்பாசன திட்டத்தினூடாக வளம் பெறுகின்ற நெற் செய்கையில் 22.5% நாட்டின் விவசாயத்துறையில் “ஜாத்தியே வீ பிஸ்ஸ” எனும் பெயரினை ஈட்டிக் கொடுத்ததும் அம்பாறை மாவட்டமாகும். உவர் நீர் மற்றும் நன்னீர் மீன்பிடித் துறைகளினூடாகவும் தேசிய உணவு உற்பத்தியில் முன்னுரிமையை இம் மாவட்டம் பெற்றுக் கொடுத்துள்ளது.

பல்கலைக்கழகம், உயர் தொழிநுட்ப நிறுவனம், கல்விக் கல்லூரிகள், தொழிநுட்ப கல்லூரிகள், தொழிற் பயிற்சி நிறுவனம் மட்டுமல்லாது தேசிய பாடசாலைகள் உள்ளிட்ட முன்னேற்றமடைந்த பாடசாலை கல்வி நிலையங்கள் ஒன்றிணைந்து கல்வித்துறையின் மிகவும் உயர்ந்த தரத்தினை பெற்றுக் கொடுப்பதற்கு அம்பாறை மாவட்டத்திற்கு இயலுமாய் உள்ளது. தேசிய மற்றும் சர்வதேச மட்டத்தில் உற்பத்தி திறன் விருத்தியை பெற்றுக் கொடுப்பதற்கும் சுகாதார சேவைக்கும் சந்தர்ப்பம் கிடைக்கப் பெற்றது மிகவும் சிறந்தொரு பாக்கியம் என்றே கூற வேண்டும். சுற்றாடல் ரீதியான கவர்ச்சி மிக்க கல்ஓயா தேசிய பூங்கா, குமண தேசிய பறவைப்பூங்கா, லாகுகல தேசிய பூங்கா அறுகம்பை சர்பின் கரையோரம் மட்டுமல்லாது கலாசார ரீதியாக முக்கியத்துவம் பெற்றுள்ள ரஜகல, தீகவாப்பிய, மகுள்மஹா விகாரை,புத்தங்கல,உகந்தை ஆலயம் கடற்கரைப் பள்ளி ஆகியவற்றை உள்ளிட்ட முக்கிய இடங்கள் காரணமாக உள்நாட்டுவெளிநாட்டு சுற்றுலா பிரயாணிகளின் உறைவிடங்களாகவும் மாறியுள்ளது.

மாவட்டத்தின் சரித்திரப் பின்னனி

புராதன இலங்கையானது உருகுணை, மாயா, இராஜரட்டை எனும் மூன்று இராட்சியங்களாக இருந்துள்ளது. உருகுணை இராஜதானியின் மிக முக்கிய செல்வந்தமாக கருதப்பட்ட தீகவாபி அல்லது திகாமடுல்ல இராஜதானியின் வரலாறு புத்தர் காலம் வரைக்கும் செல்வதாக சரித்திரச் சான்றுகளின் மூலம் உறுதிப்படுத்தப்படுகின்றது. வம்சாவளிக் கதைகளின் பிரகாரம் புத்தபெருமான் பரிநிர்வானமடைதலை காட்டுதல் இடம்பெற்ற பொழுது தான் விஜயன் இலங்கைக்கு வந்ததாக கூறப்படுகின்றது. மனிக் அக்கித்த நாகர் அரசரின் அழைப்பில் புத்தபெருமான் மூன்றாவது முறையாக இலங்கைத்தீவிற்கு எழுந்தருளப்பட்ட மங்கள பயணத்தின் போதே தீகவாபியில் எழுந்தருளியதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. விஜய மன்னனின் பின்னர் ஆட்சிக்கு வந்த பண்டுகஸ்தேவ மன்னனது காலத்திலே ஆரியர் குடியிருப்பொன்றாக அம்பாறை பிரதேசம் தோற்றமாகியுள்ளது. பண்டுகஸ்தேவ மன்னனது இராணியான கத்தியாயனா குமாரியின் சகோதரனான தியாகு குமாரனால் தோற்றுவிக்கப்பட்ட தியாயுகாமம் பின்னர் தீகவாபி மற்றும் திகாமடுல்ல ஆகிய பெயர்களில் அழைக்கப்படுவதாக வம்சாவழிக் கதைகளில் கூறப்பட்டுள்ளது.

தீககாமினியின் புத்திரரான பண்டுகாவய குமாரனால் அனுராதபுரம் தனது ஆட்சிக்குட்படுத்தப்பட்டு அனுராதபுரத்திலே தலைநகரமும் அமைக்கப்பட்டது. அதிலிருந்து அனுராதபுர பேரரசின் கீழான ஒரு நிருவாகப் பிரதேசமாக திகாமடுல்ல ஆட்சி செய்யப்பட்டதுடன் இது பிரதான தானியக் களஞ்சியமாகவும் விளங்கியது. பொலநறுவை இராஜதானி வீழ்ச்சியடைந்து ஆட்சியதிகாரம் தென்மேல் பிரதேசத்திற்கு தள்ளப்பட்டதுடன் அம்பாறை பிரதேசம் வனமாக தோற்றமாகியது.

மகாசேன மன்னனது பாரிய நீர்ப்பாசன தொழில்துறைத் திட்டம் கிழக்கில் வித்தன்னை பிரதேசத்திலிருந்து தமனகடுவ மற்றும் சேருநுவர ஊடாக கண்டி வரையும் விரிவடைந்திருந்தது. சுய அபிவிருத்தி நடவடிக்கையின் போது உருகுணையை மறக்க முடியாதுள்ளது. நீண்டகாலமாக அபிவிருத்தியடைந்துள்ள நீர்ப்பாசன தொழில்துறை தொடர்பான சிதைவுச் சின்னங்களை அம்பாறை மாவட்டதினுள் சுற்றி வருகை தருகின்ற சந்தர்ப்பத்தில் காணமுடிகிறது. இலங்கையின் வரலாற்று கல்வெட்டுக்கள் பேணப்படுவதற்கு முன்னர் கல்ஓயா மிட்டியாவத்தை வேடுவ மக்களது உணவு நிலமாக இருந்ததாக பேராசிரியர் ஆர்.எல்.வுறோக்கியரினால் குறிப்பிடப்பட்டுள்ளது. இதுவும் ஆதி ஆரியரினால் நிறுவப்பட்டுள்ள கி.மு.03ம் நூற்றாண்டு வரையான கல்வெட்டுக்களில் காணக்கூடியதாக உள்ளது.

அம்பாறை மாவட்டத்தின் வரலாறு தொடர்பாக பேசப்படுகின்ற ரஜகல பிரதேசம் பெறுமதிமிக்க சரித்திர ரீதியான தகவல்கள் கிடைக்கப்பெற்றுள்ள ஓர் பிரதேசமாகும். இங்கு காணப்படுகின்ற தாதுகர்ப்ப சிதைவுச்சின்னங்களின் இத்தீவின் வளர்ச்சிக்காக வந்துள்ளது. இட்டித்திய மற்றும் மஹிந்த தேரரர்களின் தாதுகர்ப்பம் என அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. இது மஹிந்த தேரரின் இலங்கைப்பயணம் மற்றும் அவருடன் வந்த இட்டத்திய தேரர் பற்றியும் மஹாவம்ச செய்தி உறுதிப்படுத்துகின்றது. மஹிந்த தேரர் பரிநிர்வான மடைந்த பின்னர் தந்ததாதுக்கள்

புதையலாக வைக்கப்பட்டு நாடுமுழுவதிலும் தாதுகர்ப்பங்கள் கட்டப்பட்டுள்ளதாக செய்திகள் உறுதிப்படுத்துகின்றது. இதனிடையில் ரஜகலயில் கிடைத்துள்ள மற்றுமோர் கடிதத்தில் துட்டகைமுனு மன்னனின் இராணி எனக்கூறப்பட்ட ரபிதா என்னும் பெண்ணைப் பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளது. இது சரித்திர ரீதியாக மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த கடிதமாகும். அது பொலவே நந்தமித்திரி இராட்சனி மற்றும் துட்டகைமுனு மன்னன் ஆகிய இரண்டு குடும்பங்களுக்குமிடையே விவாக சம்பந்தம் இருந்ததாக சான்று வழங்குகின்ற கல்வெட்டு ரஜகலையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இந்த கல்வெட்டையும் அம்பாறை மாவட்டத்தின் ஒமுனுகல கல்வெட்டையும் ஒன்று சேர்த்துப் பார்கின்றபோது துட்டகைமுனு மன்னனின் மகளும் நந்தமித்தரியின் மகனும் விவாகம் செய்து கொண்டதாகவும் சாட்சியமளிக்கின்றது.

தச நூற்றாண்டின் கொண்ட வெட்டுவான் கல்வெட்டை மிக விசேட முக்கியத்துவம் மிக்க சரித்திர ரீதியான மூலாதாரமாக கல்விமான்கள் ஏற்றுக்கொண்டுள்ளனர். அக் கல்வெட்டின் பிரகாரம் அனுராதபுர யுகத்தின் இறுதி அரைவாசி காலகட்டத்தின் போது சச்சிரிய சிங்க அம்பாறையில் வாழ்ந்ததாக தெளிவாக உறுதிப்படுத்தப்படுகின்றது. அதில் கூறிய கிராமம் தன்னிறைவுக் கிராமம் என்றும் விற்பனைக்காக வெளியிலிருந்து பொருட்கள் கொண்டு வர வேண்டியதில்லை என்று பெயரிடப்பட்டுள்ள கட்களையும் கொண்டுள்ளது. அது போலவே இப்பிரதேசம் அனுராதபுர இராஜதானிக்குட்பட்டு ஆட்சி செய்யப்பட்டதற்குமான தகவல்களும் அந்தக்கல்வெட்டிலே சொல்லப்படுகின்றது.

பொலநறுவை யுகத்தின் போது அம்பாறையை முக்கிய இடமாக உரித்தாக்கிக் கொண்டதற்கான சாட்சியங்கள் வரலாற்று ரீதியாக கிடைத்துள்ளது. சோலி ஆதிபத்தியத்திலிருந்து நாட்டைமீட்டெடுத்து நாட்டினை ஐக்கியப்படுத்துவதற்காக மகா விஜயபாகு மன்னனால் (1065-1110) எடுத்துச் சென்ற விடுதலை வியாபாரத்திற்கும் திகாமடுல்ல உதவியளித்துள்ளது. என்பதற்கான தகவல்களும் உள்ளன. திகாடுல்லையிலே அவரினால் செய்யப்பட்ட போர்கள் பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளது. சுகனா ரபினாவின் ஆதிபத்தியத்திற்கும் திகாமடுல்ல உட்பட்டிருந்ததாக தகவல்களும் கிடைத்துள்ளது மகாபராக்கிரபாகு மன்னன் (1133-1180) தந்ததாதுக்களை பெற்றுக்கொள்ள சுகனா ரபியாவுடன் யுத்தம் செய்ததும் தீகவாபியிலேயே என்று இலங்கை பல்கலைக்கழகத்தின் இலங்கை வரலாற்று நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது. இலங்கை வரலாற்றின் ஓர் காலத்தில் தலதா தேரர்களின் உரித்தும் கூட தீகவாபிக்கே உரித்தாகி இருந்துள்ளது என்பது இதிலிருந்து தெளிவாகின்றது.

கீர்த்திசிறிராச சிங்கன் அரசன் 1756 வருடங்களில் தீகவாபிக்கு வந்து தீகவாபி தாதுகர்பத்தை புணரமைப்புச் செய்து அவ்விகாராதிபதி வந்திகொட நிக்றோத நாயக்க தேரருக்கு பூசையும் செய்துள்ளதாக தீகவாபி அரும்பத விளக்க நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது. இச்செய்தி வம்சாவழி

செய்திகளினாலும் உறுதிப்படுத்தப்படுவதுடன் தீகவாபி தாதுகர்பத்தின் மேற்கு வாசலிலே அண்மைக்காலம் வரையும் தெரிந்து கொள்ளக்கூடியதாக காணப்பட்ட அழகொழிந்து போயுள்ள சித்திரக் குறிப்புக்கள் கண்டி யுகத்திற்குரிய சித்திர சம்பிரதாயத்திற்கு உரித்தானதெனவும் தெரியவந்துள்ளது. 1818க்கு பின்னர் அம்பாறை பிரதேசத்தில் இடம்பெற்ற முக்கியமான நிகழ்வொன்றாக சுட்டிக்காட்ட முடிவது நீர்ப்பாசன தொழிற்துறையின் அபிவிருத்தியின் போது பிரித்தானியர்கள் காட்டியுள்ள பங்களிப்பாகும் விசேடமாக 1853ல் சேர் ஹென்றி றொட் ஆளுணர் அவர்கள் கிழக்கு மாகாணத்திற்கு வருகைதந்து இந்த பிரதேசத்தின் நீர்ப்பாசனத் துறையின் அபிவிருத்திக்காக பணம் வழங்கி வைத்ததன் முக்கியத்துவம் தொடர்பாக விளங்கிக்கொண்டு அக்கால பிரித்தானிய அரசும் நீர்ப்பாசன தொழில்துறையை புணரமைப்பதற்காக பணம் வழங்கி முதலீடு செய்வதற்கான காரணமாக அமைந்திருந்தது.

இதன் கீழேயே அம்பாறை மாவட்டத்திற்குரித்தான திவுலானை சடயந்தலாவை மற்றும் சாகாமம் போன்ற நீர்த்தேக்கங்கள் புணரமைப்பு செய்தலும் 1880 தசாப்தத்தின் போது பட்டிப்பளை ஆற்றுத்திட்டம் ஆரம்பிப்பும் விசேடமாக நிகழ்ந்துள்ளது. பட்டிப்பளை ஆற்றுத்திட்டத்தின் கீழ் அம்பாறைக்குளம் கொண்டவெட்டுவான் குளம் போன்ற நீர்நிலைகளும் கல்ஓயா கங்கை நடுவே அணைக்கட்டுக்கள் அமைக்கப்பட்டும் 40000 ஏக்கர் அளவில் பயிர்ச்செய்கைக்கான நீரை வழங்கலுடன் பாரிய வயல் வெளியாகவும் இலங்கைத் தீவில் அம்பாறை மாவட்டத்திலே காணப்படுகின்றது.

இதன்பின்னர் 1930ம் தசாப்தத்தின் போது கல்ஓய நீர்ப்பாசனத்திட்டம் தொடர்பாக அடிப்படையான நோக்கங்கள் திரு. ஹேன்றி நீர்ப்பாசன பணிப்பாளரினால் முன்னிலைப்படுத்தப்பட்டதுடன் மீண்டும் ஒருமுறையாக கிழக்கிலே அம்பாறை அபிவிருத்தியின் மத்திய நிலையமாக ஆக்கப்பட்டது. விசேடமாக நீர்ப்பாசன தொழிற்துறை வரலாற்றில் புதிய நிலைப்பாட்டினை ஆரம்பித்து உயர்நிலத்தைச் சார்ந்ததாக ஆழமான நீர்தேக்கங்கள் அமைத்து நீர்ப்பாசனத்திற்கு தேவையான நீரை வழங்கும் வழிமுறைகளை திட்டமிடுதல் கல்ஓய நீர்ப்பாசன அபிவிருத்தித் திட்டத்தின் கீழேதான் இடம்பெற்றுள்ளது.

இலங்கையின் பிரித்தானியர் ஆட்சியில் புதிய அத்திவாரத்தை அமைத்துக் கொள்வதற்காக உதவியளித்துள்ள கோல்புறூக்கமரன் திட்டத்திற்கமைய 05 மாகாணங்களாக இலங்கை பிரிக்கப்பட்டது. அதிலே அம்பாறை பிரதேசம் கிழக்கு மாகாணத்திற்குள் அடங்கியிருந்தது. கிழக்கு மாகாணம் திருகோணமலை மட்டக்களப்பு ஆகிய இரு மாவட்டங்களையும் தமன்கடுவ, விந்தன்ன ஆகிய பிரதேசங்களையும் உள்ளடக்கியதாக அமைந்திருந்தது. இவ்வாறு அமைக்கப்பட்ட மாகாணங்கள் மீண்டும் மாவட்டங்களாகவும் பிரிக்கப்பட்டது. அதற்கமைய கிழக்கு மாகாணமானது திருகோணமலை, மட்டக்களப்பு மாவட்டங்களைக் கொண்டமைந்ததாகும். இதிலே மட்டக்களப்பு மாவட்டத்தினுள்ளே திகாமடுல்லையும், விந்தனையும் அமைந்திருந்தது. 1837ல் விந்தனை பதுளை மாவட்டத்துடன் இணைக்கப்பட்டது. 1961 ஆண்டிலிருந்து அம்பாறை மாவட்டம் நிறுவப்படும் வரைக்கும் திகாமடுல்ல நிர்வாக பிரிவுகளுக்கு ஆளாக்கப்படவில்லை

1.2 அம்பாறை மாவட்ட செயலகத்தின் நோக்கு இலக்கு மற்றும் செயற்பாடுகள்

நோக்கம்

புதுமை மிக்க சமூதாயத்தினைக் கொண்ட வள மிக்கதோர் மாவட்டம்

பணிகள்

மாவட்டத்திலுள்ள வளங்கள் முழுவதையும் நல்லாட்சிப் பொறிமுறையின் ஊடாக முகாமைத்துவப்படுத்தி நிலையான அபிவிருத்தியினை முன்னெடுத்துக் கொண்டு சுதந்திரமானதும், பாதுகாப்பான மனம் கவர்ந்த சூழலில் அறிவு, திறமை, ஆக்கம் மற்றும் சுகதேக தன்மை நிறைந்த மிகவும் உயர்ந்த வாழ்கைத் தரத்தினைக் கொண்ட மக்களை உள்ளடக்கிய வள மிக்க மாவட்டத்தினை கட்டியெழுப்புதல்

பிரதி பலன்கள்

- உணர்ச்சி பூர்வ மிக்க அரச சேவை குழாத்தினரை தேடிவரும் அனைவருக்கும் மனதை கவரும் விதத்தில் புதுமை மிக்க நம்பிக்கையான சேவை
- புதுமையை தேடிச் சென்று உடனடியாக தீர்வுகாண முயலும் பணிக் கலாச்சாரம்.
- தூய்மையான மற்றும் பசுமை மிக்க சூழலினூடாக அத்தியவசியமான தேவைப்பாட்டை நிறைவேற்றிக் கொள்ளும் அழகு மிக்க சூழல்
- நல்லாட்சிக்கு இட்டுச் செல்லல்

1.3 மாவட்ட செயலக நிருவாக பிரிவின் கடமைகளும் பொறுப்புக்களும்

- அலுவலக நிருவாக நடவடிக்கைகள்
- நிருவாக பொறுப்புக்கள், நிருவாக விடுமுறை, மற்றும் புகையிரத பயணச்சீட்டு
- பிரதேச செயலகங்களின் நிருவாக நடவடிக்கைகளும் கண்காணிப்பு நடவடிக்கைகளும்
- கிராம உத்தியோகத்தர்களின் நிருவாக நடவடிக்கைகள்
- நெல் கொள்வனவு தொடர்பான நடவடிக்கைகள்

மாவட்ட செயலக நிருவாக மற்றும் ஒருங்கிணைப்பு பிரிவின் கடமைகளும் பொறுப்புக்களும்

- அலுவலக நிருவாக நடவடிக்கைகள்
- சமூக சேவை நடவடிக்கைகள்
- கலாச்சார மற்றும் மத நடவடிக்கைகள்
- மனித வள அபிவிருத்தி மற்றும் வினைத்திறன் அபிவிருத்தி பயிற்சி நடவடிக்கைகள்
- பிறப்பு, இறப்பு, திருமணப்பதிவாளர் மற்றும் திடீர் மரண விசாரணையாளர்களை நியமிப்பு செய்வது தொடர்பான நடவடிக்கைகள்
- ஜூரிமார்களின் பெயர் அட்டவணையை தயாரித்து நீதிமன்றத்திற்கு சமர்ப்பித்தல்
- மாவட்ட மட்டத்தில் தேசிய நிகழ்வுகள் மற்றும் பல்வேறுபட்ட வேலைத்திட்டங்களை ஒழுங்கமைத்தல்
- பொதுமக்கள் தொடர்பிலான முறைப்பாட்டு நடவடிக்கைகள்
- தேவையேற்படும் சந்தர்ப்பத்தில் அரச, அரச சார்பற்ற நிறுவனங்களின் உதவிகளை மக்களுக்கு வழங்குதல்
- அனர்த்தம் மற்றும் சுனாமி மீள்கட்டமைப்பு நடவடிக்கைகள்
- சுடுகலன் மற்றும் வெடிபொருட்களுக்கான அனுமதிப்பத்திர நடவடிக்கைகள்
- சுற்றுலா விடுதி தொடர்பான நடவடிக்கைகள்

1.4 அம்பாறை மாவட்ட செயலகத்தினுடைய ஒழுங்கமைப்பு அட்டவணை



1.5 மாவட்ட செயலகம் மற்றும் அதனோடு இணைந்த நிறுவனங்கள்.

அம்பாறை நகர மையத்தில் இருந்து ஒரு கிலோமீற்றர் வடக்கில் மாவட்ட செயலகம் அமைந்துள்ளது. மாவட்டத்தினுடைய நிருவாகத்திற்குரிய பாரிய கடமைப் பொறுப்புக்களை இந்த அலுவலகம் மூலம் செய்யப்படுகின்றன. மாவட்ட செயலகம் அமைந்துள்ள கட்டடம் உறுதியானதும், கருங்கல்லினாலும் அமைக்கப்பட்ட பழங்காலக் கட்டடமாக இருப்பதுடன் அது கல்லோயத் திட்டத்தின் கீழே ஸ்தாபிக்கப்பட்டது. அதிகமானவர்களினால் இது அம்பாறை கச்சேரி என அழைக்கப்படுகின்றது. இந்த கச்சேரி வளவினுள் பல்வேறுபட்ட திணைக்களகங்களின் அலுவலகங்கள் மற்றும் பல்வேறுபட்ட பிரிவுகளும் காணப்படுகின்றன அவையாவன,

1.	மாவட்ட சமூர்த்தி அலுவலகம்
2.	மாவட்ட திட்டமில் செயலகம்
3.	உதவிதேர்தல் ஆணையாளர் அலுவலகம்
4.	மாவட்ட வாகனப் போக்வரத்து அலுவலகம்
5.	கணக்காய்வு உப அலுவலகம்
6.	மாவட்ட அளவை நிறுவை மற்றும் சேவைகள் திணைக்கள் அலுவலகம்
7.	மாவட்ட புள்ளிவிபரவியல் பிரிவு
8.	அனர்த்த முகாமைத்துவ பிரிவு
9.	மாவட்ட விளையாட்டு பிரிவு
10.	பிரதி காணி ஆணையாளர் அலுவலகம்
11.	மாவட்ட காணி சீரமைப்பு சபை
12.	மாவட்ட சமூகப் பாதுகாப்பு சபை
13.	உதவி காணியாளர் அலுவலகம் (மகாணம்)
14.	மாவட்ட காணி பயன்பாட்டு மற்றும் திட்டமிடல் திணைக்கள அலுவலகம்
15.	மேலதிக மாவட்ட பதிவாளர் அலுவலகம்
16.	மீள் எழுச்சி நிகழ்ச்சித்திட்டம்
17.	விவசாயத் திணைக்களக்களத்தின் விதை உறுதிப்படுத்தும் அலுவலகம்
18.	ஏற்றுமதி அபிவிருத்தி சபையின் கிழக்கு மாகாண அலுவலகம்

1.6 மாவட்ட செயலகத்தின் கீழ் உள்ள கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் மற்றும் மாவட்ட செயலகத்தில் இருந்து பிரதேச செயலகத்திற்கான தூரம்

மாவட்ட செயலகத்தின் கீழ் 20 பிரதேச செயலகங்கள் உள்ளன. அப்பிரதேச செயலகங்களின் 503 கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் காணப்படுகின்றன.

இல	பிரதேச செயலகம்	கி.சேவகர் பிரிவுகளின் எண்ணிக்கை	மாவட்ட செயலகத்தில் இருந்து பிரதேச செயலகத்திற்கான தூரம்(KM)
01	தெகியத்தக்கண்டிய	13	160
02	பதியத்தலவ	20	84
03	மகோயா	17	60
04	உகண	55	12
05	அம்பாறை	22	-
06	தமன	33	17
07	லாஹுகல	12	75
08	பொத்துவில்	27	83
09	திருக்கோயில்	22	40
10	ஆலையடிவேம்பு	22	26
11	அக்கரைப்பற்று	28	26
12	அட்டாளைச்சேனை	32	29
13	இறக்காமம்	12	12
14	நிந்தவூர்	25	26
15	காரைதீவு	17	23
16	சாய்ந்தமருது	17	26
17	கல்முனை (முஸ்லிம்)	29	30
18	கல்முனை (தமிழ்)	29	30
19	நாவிதன்வெளி	20	36
20	சம்மாந்துறை	51	20

1.7 வெளிநாட்டு நிதியீட்டத்திலான விபரங்கள்

NIL

அத்தியாயம் 02

2019 முன்னேற்ற மற்றும் எதிர்கால கண்ணோட்டம்

சிறப்பு அடைவுகள்,சவால்கள் மற்றும் எதிர்கால இலக்குகளை சுருக்கமாக விளக்குக.

01. 2019 வருடத்தில் அம்பாறை மாவட்ட செயலகத்தினால் நிறைவேற்றப்பட்ட சேவைகள் மற்றும் மேற்கொள்ளப்பட்ட செயற்திட்டங்களுக்கு அமைவாக செயலாற்றுகையானது கீழே சமர்ப்பிக்கப்பட்டுள்ளது 01 **2019** வருடத்தின் செயலாற்றுகை.

I. இம் மாவட்டத்திலுள்ள அதிகமான மக்கள் விவசாயத்தினை ஜீவனோபாயமாக கொண்டு வாழ்பவர்கள். 2019 வருடத்தில் DS.சேனநாயக்கா சமுத்திரத்தில் குறைந்த கொள்ளளவு நீரினைப்பயன்படுத்தி விவசாயிகள் முகம்கொடுத்த பிரச்சினைகளுக்கு போதிய நீர் முகாமைத்துவத்தின் கீழ் நடவடிக்கை மேற்கொண்டு 80% அளவு விவசாய மக்களுக்கு பயிர்செய்கை வசதிகளை வழங்குவதற்கு சந்தர்ப்பம் கிடைத்தது. தேசிய நெல் அறுவடையில் 1/5 அளவு பங்குதாரர் ஆவதற்கு இம் மாவட்டத்திற்கு இயலுமானது.

II. சிங்களம்,தமிழ்,முஸ்லிம் ஆகிய இனங்கள் ஒன்றித்து வாழும் அம்பாறை மாவட்டமானது பல்லின மதத்தை மற்றும் பல்லின கலாச்சாரத்தை கொண்ட மாவட்டமாகும். இம் மக்களை ஒன்றிணைத்து இவ் வருடத்தில் தேசிய சுதந்திர தின விழாவை இம் மாவட்டத்தில் அதி உன்னத விதத்தில் வெற்றிகரகாக நடாத்த முடிந்தது.

III. தேசிய அனர்த்தமாக மாறிய 2019 வருடத்தில் ஏப்ரல் மாதத்தில் ஏற்பட்ட கிறிஸ்தவ தேவாலயம் மற்றும் பிரபல இடங்களில் ஏற்பட்ட குண்டு வெடிப்பானது பல்லின மக்கள் பல்லின மதத்தைக் கொண்ட மக்கள் வாழும் இம் மாவட்டத்தில் சமாதானம், நல்லிணக்கம் ஆகியவை சிறந்த முறையில் எடுத்துச் சென்று சிறு சம்பவம் ஏற்படாத வண்ணம் நடவடிக்கை மேற்கொண்டு பயங்கர நிலமைக்கு வெற்றிகரமாக முகம் கொடுக்க இயலுமானது.

IV. பொதுமக்களின் பங்களிப்பினை பெற்றுக்கொண்டு சகல கிராமங்களும் உட்படும் வகையில் பல்வேறு செயற்திட்டங்களை மேற்கொண்டு “நாட்டுக்காக ஒன்று படுவோம்” எனும் தேசிய வேலைத்திட்டத்தினை உகன பிரதேச செயலகப்பிரிவில் நடாத்தி வெற்றிகரமான முறையில் முடிப்பதற்கு இயலுமானது.

V. அம்பாறை மாவட்டத்தில் சேனைப் பயிர்செய்கையின் கீழ் சோளம் பயிர்செய்கையில் ஏற்பட்ட **சேனா மயிர் கொட்டி தாக்கம்** தேசிய மட்டத்திற்கு செல்லாமல் வெற்றிகரமான விதத்தில் முறியடிப்பதற்கு இயலுமானது மற்றும் விவசாயிகளுக்கு ஏற்பட்ட நஷ்டத்திற்கு நஷ்டஈடு வழங்குவதற்கும் இயல்மானது.

VI. மரநடுகை பணியில் சூழல் பாதுகாப்பு பணிகளுக்கு வெற்றிகரமான முறையில் பங்களிப்பு வழங்க கிடைத்தமை.

VII. தேசிய மற்றும் சர்வதேச சர்வின போட்டியினை அம்பாறை மாவட்டத்தின் அறுகம்பை கடல் பகுதியில் அரச பங்களிப்பின் கீழ் வெற்றிகரமாக நடாத்துவதற்க் 2019 வருடத்தில் இறுதிப் பகுதியில் இயலுமானது.

VIII. பல்வகை இனம் மற்றும் பல்லின மத சூழலினுள் பௌத்த, இந்து, இஸ்லாம், கிறிஸ்தவம் ஆகிய சகல மதத்தினருக்கு நேரடியாக நடவடிக்கை மேற்கொள்ள இயலுமானது.

IX. 2019 வருடத்தில் நடந்த ஜனாதிபதித் தேர்தலில் வன்முறைகள் குறைந்த தேர்தல் ஒன்றை வெற்றிகரமாக நடாத்த இயலுமானது.

X. நெல் கொள்வனவுப் பணியின் போது ஏனைய மாவட்டங்களை விட முன்னோக்கி 12,000 மெட்ரிம் டொன் அளவினை அண்மிக்கும் அளவுக்கு நெல் கொள்வனவு செய்து கூடிச் செல்லும் அரிசியின் விலையினை சமப்படுத்துவதற்கு பங்களிப்பு வழங்குவதற்கு இம் மாவட்டத்திற்கு இயலுமானது.

XI. வருட இறுதியில் கிழக்கு மாகாணத்திற்கு தாக்கம் செலுத்தும் தென்மேல் பருவப் பேச்சிக் காற்றின் பெறுபேறாக ஏற்பட்ட அனர்த்த நிலமைக்கு வெற்றிகரமான முகம் கொடுக்க முடிந்ததுடன் அனர்த்தத்திற்கு உள்ளானவர்களுக்கு நிவாரணம் வழங்கும் பணிகள் வெற்றிகரமாக மேற்கொள்ள முடிந்தமை.

XII. மாவட்டத்தில் அபிவிருத்திப் பணிகளுக்காக ஒதுக்கப்பட்ட நிதி ஒதுக்கீட்டை உச்ச விதத்தில் பிரயோசனப்படுத்திக் கொண்டு வெற்றிகரமாக மாவட்டத்தின் அபிவிருத்தி பணிகளுக்கா பங்களிப்பு வழங்க முடிந்தமை.

02 . செயலாற்றுகையினை நிறைவேற்றும் போது ஏற்பட்ட சவால்கள்

- விவசாயிகளுக்கு பயிர்செய்கை வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கும் போது குறைந்த கொள்ளளவு நீரினைக் கொண்டு பாரிய முகாமைத்துவத்துடன் நடவடிக்கை மேற்கொள்ள நேரிட்டமை.
- சோளம் பயிர்செய்கைக்கு ஏற்பட்ட **சேனா மயிர் கொட்டி** தாக்குதலின் போது தொற்றுவதை தடுப்பதற்கு நடவடிக்கை எடுத்தமை விவசாயிகளின் உள ரீதியான தாக்கத்தினை குறைக்க நேரிட்டமை.
- ஏப்ரல் மாதத்தில் இலங்கையில் ஏற்பட்ட அனர்த்த நிலமையின் போது பல்லின பல்வகை மத மக்கள் வாழும் மாவட்டமான அம்பாறை மாவட்டத்தில் மக்களின் சிந்தனைகளை சீர் செய்வதற்கு பிரதேசத்தில் சமாதானம் மற்றும் நல்லிணக்கத்தை ஏற்படுத்தியமை.
- கஷ்ட பிரதேச செயலக காரியாலயங்களில் குறைந்த வசதிகள், குறைந்த பணிக்குழுவினர்களை கொண்டு கடமைகளை மேற்கொள்ள நேரிட்டமை.

03 எதிர்கால நோக்கம்

- ✓ தன்னிறைவு கொண்ட தேசத்தை நோக்கிச் செல்லும் பயணத்தில் 23% அளவு மாவட்டத்தின் அரிசி உற்பத்தியில் 25% வரை கட்டியெழுப்புவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளல்.
- ✓ இடைக்கால பயிர்களான கௌப்பி, பாசிப்பயறு, பால் உற்பத்திகளின் கொள்ளளவினை கட்டியெழுப்புவதற்கு நடவடிக்கை எடுத்தல்.
- ✓ யானை வேலி நிர்மாணிப்பதன் பெறுவேறாக மனித, யானை மோதல்களை குறைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல்.
- ✓ மூலப் பொருட்களை உற்பத்திப் பொருட்களாக மாற்றி பெண் குடும்பத் தலைவரைக் கொண்ட குடும்பங்களில் பெண் தொழில் முயற்சியாளர்களை உருவாக்குவதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ளல்
- ✓ மர நடுகை பணியினை மேம்படுத்தி காடுகளை வளர்க்கும் பணியினை 3% னால் கட்டியெழுப்புவதற்கு நடவடிக்கை எடுத்தல்.
- ✓ பிரதேசத்தில் நிலவும் உலர் காலநிலை நிலமைக்கு ஏற்ப சூரிய ஒளியின் உதவியுடன் மின்சார உற்பத்திக்கு பங்களிப்பு வழங்குதல்.
- ✓ தற்போது கூட தேசிய மட்டத்தில் நடைமுறைப்படுத்திச் செல்லும் நன்னீர் மீன்பிடித்துறையில் ஈடுபட்டுள்ளவர்களின் அளவை கட்டியெழுப்பி நன்னீர் மீன்களை உற்பத்தி செய்து நாட்டில் முதலாவது இடத்தை பிடித்து கொள்ளல்.
- ✓ கவர்ச்சிமிக்க இடங்களை மேம்படுத்தி சுற்றுலாதுறையின் மேம்படுத்துவதற்கு பங்களிப்பு வழங்குதல்.
- ✓ தற்போது நடைமுறைப்படுத்தப்பட்ட நகர அபிவிருத்தி இலக்கினை நிறை வேற்றிக் கொள்ளல்.

..

டீ.எம்.எல்.பண்டாரநாயக்க,
மாவட்ட அதிபர், மாவட்ட செயலாளர்,
அம்பாறை மாவட்டம்.

3.1 2019 டிசம்பர் 31ல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றுகைக் கூற்று

			உண்மை நிலை	ரூபா	
பாதீட்டு 2019		குறிப்பு	2019	2018	
-	**வருமானப் பெறுகைகள்**				ஏசீஏ-1
-	வருமான வரி	1	-	-	
-	உள்ளுர்பொருட்கள் மற்றும் சேவைகள் மீதான வரி	2	-	-	
-	சர்வதேச வர்த்தகம் மீதான வரி	3	-	-	
-	லரியில்லாத வருமானங்களும் ஏனையவையும்	4	-	-	
	மொத்த வருமானப் பெறுகைகள் (A)		-	-	
-	**வருமான பெறுகைகள்**				
-	திறைசேரி பணி முற்பணங்கள்		5,472,263,988	3,476,980,423	ஏசீஏ-3
-	வைப்புக்கள்		1,010,042,555	815,279,772	ஏசீஏ-4
46,000,000	முற்பணக் கணக்குகள்		57,686,391	53,942,344	ஏசீஏ-5/5ஏ
-	ஏனைய பெறுகைகள்		387,032,340	195,429,019	
	மொத்த வருமானம் அல்லாத பெறுகைகள்(B)=(A+B)		**6,927,025,274**	**4,541,631,558**	
-	**மொத்த வருமானம C=(A)+(B)**		**6,927,025,274**	**4,541,631,558**	
	கழி : செலவினங்கள				
-	**மீண்டும்வரும் செலவினம்**				
780,000,000	சம்பளம்,கூலி,மற்றும் ஊழியர் அனுகூலங்கள்	5	765,520,841	731,926,197	ஏசீஏ-2(ii)
139,700,000	ஏனைய பொருட்கள் சேவைகள்	6	133,177,629	110,597,618	
5,300,000	மானியங்கள் ,கொடைகள் மற்றும் மாற்றல்கள்	7	4,037,717	4,061,666	
-	வட்டிக் கொடுப்பனவுகள்	8	-	-	
-	ஏனைய மீண்டும்வரும் செலவினம்	9	-	-	
925,000,000	**மொத்த மீண்டும்வரும் செலவினம்(D)**		**902,736,187**	**846,585,482**	
	மூலதனம் செலவினம்				
19,500,000	மூலதனச் சொத்துக்களின் புனரமைப்பும்,மேம்படுத்தலும்	10	13,546,990	18,644,095	ஏசீஏ-2(ii)
108,000,000	மூலதனச் சொத்துக்களின் கொள்வனவு	11	36,371,774	54,674,746	
-	மூலதன மாற்றல்கள்	12	-	-	
-	நிதிச் சொத்துக்களின் கொள்வனவு	13	-	-	
2,500,000	மனித வள அபிவிருத்தி	14	1,300,264	1,999,372	
4,050,000	ஏனைய மூலதன செலவினங்கள்	15	2,675,592	-	
134,050,000	**மொத்த மூலதனம் செலவினம் (E)**		**53,894,620**	**75,318,213**	
	பிரதான பேரேட்டுச் செலவினம் (F)		**964,939,853**	**881,260,983**	
-	**வைப்புக் கொடுப்பனவுகள்**		891,585,582	803,269,074	ஏசீஏ-4
75,000,000	**முற்பணக் கொடுப்பனவுகள்**		73,354,271	77,991,909	ஏசீஏ-5/5ஏ
	மொத்த செலவிம் G=(D +E+F)		**1,921,570,659**	**1,803,164,678**	
-	**2019 டிசம்பார் 31ல் உள்ளவாறான பணிமுற்பண மீதி H=(C-G)**		**5,005,454,615**	**2,738,466,880**	

3.3 2019 டிசம்பர் 31ல் உள்ளவாறான நிதி நிலமைக் கூற்று

ஏசீஏ-பீ

மாவட்ட செயலகம்- அம்பாறை

2019 டிசம்பர் 31ல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று

	குறிப்பு	2019 ரூபா	2018 ரூபா
நிதி சொத்துக்கள் அற்றது			
ஆதனம்,பொறித் தொகுதி மற்றும் உபகரணம்	ஏசீஏ-6	1,377,458,356	704,267,838
நிதி சொத்துக்கள்			
முற்பணக் கணக்குகள்	ஏசீஏ-5/5ஏ	211,475,953	195,827,573
காசு மற்றும் காசுக்குச் சமனானவை	ஏசீஏ-3	-	-
மொத்த சொத்துக்கள்		**1,588,934,309**	**900,095,411**
தேறிய சொத்துக்கள்∴உரிமைப் பங்கு			
தேறிய பெறுமதி		(150,657,709)	(43,748,996)
ஆதனம்,பொறித் தொகுதி மற்றும் உபகரண ஒதுக்கம்		1,377,458,356	704,267,838
நடைமுறைப் பொறுப்புக்கள்			
வைப்புக் கணக்குகள்	ஏசீஏ-4	358,033,542	239,576,569
பணிமுற்பண மீதி	ஏசீஏ-3	4,100,120	-
மொத்தப் பொறுப்புக்கள்		**1,588,934,309**	**900,095,411**

பக்க இலக்கம் 01 முதல் 22 வரை ஏசீஏ 1 முதல் ஏசீஏ 5 வரையான மாதிரிப்படிவங்களின் மூலம் சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்குத்தகவல்கள் மற்றும் குறிப்புக்களின் பக்க இலக்கம 23 முதல் 30 வரை உள்ளடங்கியுள்ள ஏனைய கணக்குக குறிப்புகளின் விபரமும் இந்த இறுதிக் கணக்குகளில் உள்ளடங்கிய பகுதியாகும். இந்த நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைக்கு இணங்கியதாக மேற்கொள்ளப்பட்டுள்ள அதேவேளையில் இங்கு நிதிக்கூறுகளின் குறிப்புகளின் மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ளவாறு மிகவும் பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. ஆதனால் மேலே உள்ள இறுதிக் கணக்குகளில் குறிப்பிடப்பட்டுள்ள தொகைகள் அது தொடர்பான கணக்குக் குறிப்புகள் மற்றும் ஏனைய கணக்குத் தகவல்கள் திறைசேறிப் புத்தகங்களுடன் சீராக்கம் செய்யப்பட்டள்ளது என்பதையும் அவை அந்தத் தொகைகளுடன் உடன்படுகிறது என்பதையும் இத்தால் சான்றுப்படுத்துகின்றோம்.

பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்	கணக்கீட்டு உத்தியோகத்தர்	பிரதான கணக்காளர்
பெயர்: எஸ்.ஹெட்டியாராச்சி	டீ.எம் எல். பண்டாரநாயக்க	எம்.ஐ.எம்.முஸ்தாபா
செயலாளர் பொது நிரவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண பைகள் மற்றும் உள்ளுராச்சி அமைச்சு	மாவட்ட செயலாளர்	திகதி: 2020.02.24
திகதி: 2020.02. 28	திகதி: 2020.02.24	

S. Hettiarachchi
Secretary
Ministry of Public Administration,
Home Affairs and Provincial Councils
& Local Government
"NILA MEDURA"
Elvitigala Mw., Narahenpita, Colombo - 05.

D.M.L. Bandaranayake
Government Agent
District Secretary
Ampara District

M.I.M. Musthafa
Chief Accountant
District Secretariat
Ampara

2

3.4 2019 டிசம்பர் 31ல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று

	உண்மை 2019	ரூபா. 2018
தொழிற்பாட்டு செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்		
மொத்த வரிப் பணம்	-	-
கட்டணங்கள்,தண்டப்பணங்கள்,தண்டனைகள் மற்றும் உத்தரவுப் பத்திரங்கள்	-	-
இலாபம்	-	-
வருமானம் அல்லாத பெறுகைகள்	-	-
ஏனைய செலவினத் தலைப்புகளுக்காக சேகரிக்கப்பட்ட வருமானம	387,032,340	195,429,019
கிட்டைக்கப பெற்ற கடடுநிதி	5,472,263,988	3,476,980,423
செயற்பாடுகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு	**5,859,296,328**	**3,672,409,442**
கழி - பகிர்ந்தளிக்கப்பட்ட காசு		
ஆளுக்குரிய வேதனங்கள் மற்றும் தொழிற்பாட்டுக் கொடுப்பனவுகள்	897,315,780	842,523,815
மானியங்களும் மாற்றுக் கொடுப்பனவுகளும்	4,037,717	4,061,666
ஏனைய செலவினத் தலைப்புகளுக்காக மேறகொள்ளப்பட்ட செலவீனம	1,968,135,350	1,307,233,508
திறைசேரிக்குத் தீர்க்கப்பட்ட பணிமுற்பணம்	-	-
தொழிற்பாடுகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்தக் காசு (ஆ)	**2,869,488,846**	**2,153,818,990**
தொழிற்டு செயற்பாடுகளிலிருந்தான வருமானமதறிய காசுப் பாய்ச்சல் (இ)ஸ்ரீ(அ),(ஆ)	**2,989,807,482**	**1,518,590,452**
முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்		
வட்டி	-	-
பங்கு இலாபம்	-	-
பௌதீக சொத்துக்களின் விற்பனை	-	-
வழங்கப்பட்ட கடன்கள் மீதான அறவீடுகள்	-	-
முற்பணங்களிலிருது அறவ்டப்படவ்வ	73,093,054	64,047,931
முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்த காசு (ஈ)	**73,093,054**	**64,047,931**
கழி - பகிர்ந்தளிக்கப்பட்ட காசு		
கொள்வனவு அல்லது பௌதீகச் சொத்துக்களின் நிர்மாணிப்பு மற்றும் ஏனைய முதலீடுகளின் கொள்வனவு	3,078,979,070	1,489,513,510
முற்பணக் கொடுப்பனவுள	98,220,219	105,135,670
முதலீட்டு செயற்பாடுகளுக்கு வழங்கப்பட்ட மொத்தக் காசு (உ)	**3,177,199,289**	**1,594,649,180**
முதலீட்டு செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (ஊ)ஸ்ரீ(ஈ)-(உ)	**(3,104,106,235)** -	**(1,530,601,249)** -
தொழிற்பாடு மற்றும் மதலீட்டுச் செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல்(எ)ஸ்ரீ(இ-ஊ)	**(114,298,753)**	**(12,010,797)**
நிதிச் செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்		
உள்ளூர்க் கடன்கள்	-	-
வெளிநாட்டுக் கடன்கள்	-	
பெற்ற நன்கொடைகள்	-	-
கிடைக்கப்பெற்ற வைப்புககள்	1,010,047,714	815,279,772
நிதிச் செயற்பாடுகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (ஏ)	**1,010,047,714**	**815,279,772**
கழி - பகிர்ந்தளிக்கப்பட்ட காசு:		
உள்ளூர் கடன் மீதான மீளக் கொடுப்பனவுகள்	-	-
வெளிநாட்டுக் கடன்கள் மீதான மீளக் கொடுப்பனவுகள்	-	-
வைப்புகளின கொடுப்பனவு	891,648,741	803,269,074
நிதிச் செயற்பாடுகளில் பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்தக் காசு (ஐ)	**891,648,741**	**803,269,074**
நிதிச் செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (ஒ)ஸ்ரீ(ஏ)-(ஐ)	**118,398,973**	**12,010,697**
காசில் ஏற்பட்ட தேறிய அசைவு (ஓ)ஸ்ரீ(எ)-(ஒ)	4,100,220	(100)
ஜனவரி 01 ஈம் திகதியிலுள்ளவாறான ஆரம்ப காசு மீதி	(100)	-
டிசம்பர் 31ஆம் திகதியிலுள்ளவாறான இறுதிக் காசு மீதி	**4,100,120**	**(100)**

3.5 நிதிக் கூற்றுக்கான குறிப்புகள்

அறிக்கையிடலின் அடிப்படை

1) அறிக்கையிடலின் காலப்பகுதி

இந் நிதிக் கூற்றுக்களுக்கான அறிக்கையிடல் காலப்பகுதி 2019 ஜனவரி 01 முதல் டிசம்பர் 31 வரையாகும்.

2) அளவீட்டுக்கான அடிப்படை

நிதிக்கூற்றுக்களானது, வரலாற்றுக் கிரய அடிப்டையிலயே தயாரிக்கப்பட்டுள்ளது அதே வேளையில், ஒரு சில சொத்துக்களின் வரலாற்றுக் கிரயம் மீள் மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதிக்கு மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. வேறு விதத்தில் குறிப்பிடப்பட்டில்லாத போது கணக்கு தயாரிப்பு நடவடிக்கைகள் மேம்படுத்தப்பட்ட காசு அடிப்படையில் மேற்கொள்ளப்படும்.

3) வருமானத்தை அடையாளம் காணுதல்

நாணயமாற்று மற்றும் நாணயமாற்று அல்லாத வருமானங்கள் அவை கிடைக்ககூடிய காலப்பகுதியை கவனத்தில்கொள்ளாது, காசு கிடைக்கக் கூடிய காலப்பகுதிக்குள் வருமானமாக அடையாளங் காணப்படுகின்றது.

4) சொத்து, இயந்திர மற்றும் உபகரணம் ஆகியவற்றின் அங்கீகாரம் மற்றும் அளவீடு

சொத்துக்கள் நம்பத்தகுந்த அடிப்படையில் அளவிடப்படுகின்றதா மற்றும் நிறுவனத்தின் சொத்துக்கள் எதிர்காலப் பொருளாதார நலன்களுடன் தொடர்புடையதாக இருக்கின்றதா என்பதற்கான நிகழ்தகவின் அடிப்படையிலேயே சொத்து, இயந்திரம் மற்றும் உபகரணங்கள் அங்கீகரிக்கப்படுகின்றன.

கிரய முறைபொருத்தமில்லாத சந்தர்ப்பத்திலேயே சொத்து, இயந்திர மற்றும் உபகரணங்கள் கிரயம் மற்றும் மறமதிப்பீட்டு முறையில் அளவீடு செய்யப்படுகின்றது.

5) சொத்து, இயந்திர மற்றும் உபகரணகங்களின் ஒதுக்கம்

இந்த மீள்மதிப்பு ஒதுக்கீட்டுக் கணக்கானது சொத்து, இயந்திர மற்றும் உபகரண கணக்கின் தொடர்புபட்டதாகும்.

6) காசு மற்றும் காசுக்கு சமமானவை

காசு மற்றும் காசுக்கு சமமானவை 2019 டிசம்பர் 31 இல் உள்ள உள்நாட்டு நாணயத்தாள்கள் மற்றும் நாணயங்ளை உள்ளடக்கியதாகும்.

3.6 வருமான சேகரிப்பு செயலாற்றுகை 2019

வருமான குறியீடு	வருமான குறியீட்டின் விபரம்	வருமான மதிப்பீடு		சேகரிக்கப்பட்ட வருமானம்	
		அசல் மதிப்பீடு	இறுதி மதிப்பீடு	தொகை(ரூபா)	இறுதி வருமான மதிப்பீடு %
1003-07-02	பதிவாளர் திணைக்களத்தில் வருவாய்	25,000,000.00	-	**24,745,554.10**	98.98
1003-07-03	வனப் பாதுகாப்புத்துறை வருவாய்	2,000,000.00	-	**1,709,428.00**	85.47
1003-07-05	பாதுகாப்பு அமைச்சுக்குரிய வருவாய்	250,000.00	-	**248,030.00**	99.21
1003-07-09	காபன் வருவாய்	55,000,000.00	-	**54,063,899.93**	98.29
1003-07-99	உள்நாட்டலுவல்கள் அமைச்சின் வருவாய்	8,500,000.00	-	**8,471,054.37**	99.65
2002-01-01	அரச கட்டடம் மற்றும் வீட்டுவசதிக்கு வாடகை வருவாய்	3,200,000.00	-	**3,174,106.23**	99.19
2002-01-03	காணி அமைச்சுக்குரிய வருவாய்	25,900,000.00	-	**25,862,673.81**	99.85
2002-02-99	வட்டி மற்றும் வேறு	10,000,000.00	-	**10,108,673.59**	101.08
2003-02-13	பரீட்சைத் திணைக்களத்துகுரிய வருவாய்	900,000.00	-	**852,310.00**	94.70
2003-02-14	மோட்டார் போக்குவரத்து துறையின் வருவாய்	98,000,000.00	-	**97,109,688.50**	99.09
2003-02-03	தனிநபர்களின் பதிவுக் கட்டணம்	12,100,000.00	-	**12,092.,336.00**	99.93
2003-02-99	பலவித சில்லரை வஸ்துக்கள் வருவாய்	1,000,000.00	-	**905,009.00**	90.50
2003-03-02	அபராதம் மற்றும் பிற கட்டணங்களுக்கு	1000.00	-	**1000.00**	100
2003-99-00	பிற ரசீதுகள்	94,000,000.00	-	**93,292,462.93**	99.24
2004-01-00	மத்திய அரசுக்குரிய சில வருவாய்	55,000,000.00		**54,271,013.40**	98.67
2006-02-00	நிலையான சொத்துக்களின் வருவாய்	125,100.00	-	**125,100.00**	100

3.7 2019 டிசம்பர் 31 இல் முடிவுற்ற காலப்பகுதிக்கான நிகழ்ச்சித்திட்டத்தின் மூலமான செலவினங்கள்

செலவின தலைப்பு : 270 அமைச்சின்/திணைக்களத்தின்/மாவட்டசெயலகம் அம்பாறை

வருடாந்த மதிப்பீட்டில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு நிகழ்ச்சித் திட்ட இல	செலவின தலைப்பு	வருடாந்த வரவு செலவு ஏற்பாடு	குறை நிரப்பு மதிப்பீட்டு ஏற்பாடு	நி.ஒ.66/69 மாற்றல்கள்	மொத்த தேறிய ஒதுக்கீடு (4)=(1)+(2)+(3)	மொத்தச் செலவினம் (5)	தேறிய பெறுபேறு மீதி/மேலதிகம்
		Rs.	Rs.	Rs.	Rs.	Rs.	Rs.
நிகழ்ச்சித்திட்டம் (1)							
(a) இருப்பின் மீதி(DGSA 3)	(1) மீண்டெழும்	925,000,000	-	15,500,000 (15,500,000)	925,000,000	902,736,187	22,263,813
(b) மூலதனம் (DGSA 4)	(2) மூலதனம்	130,000,000	4,050,000	-	134,050,000	53,894,620	80,155,380
மொத்தம்		**1,055,000,000**	**4,050,000**	**-**	**1,059,050,000**	**956,630,806**	**102,419,194**

3.8. நி.பி குறிப்பு 208 பிரகாரம் ஏனைய அமைச்சுக்கள் / திணைக்களங்களின் முகவராக திணைக்களம் / மாவட்ட செயலகம் / மாகாணச் சபைக்கான செலவினத்திற்கான ஒதுக்கீடு

தொ. இல			ஒதுக்கீடு			
01	தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார விவகாரம் மீள்குடியேற்றம் மற்றும் புனர்வாழ்வு வடமாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞரை விவகாரங்கள் அமைச்சு	வேலைத்திட்டம் (104-2-6-1-2506)	93,380,000.00	93,380,000.00	87,680,798.85	93.89
02		வேலைத்திட்டம் (104-2-6-6-2506)	436,116,142.00	436,116,142.00	119,066,396.55	27.30
03		வேலைத்திட்டம் (104-2-6-7-2509)	10.500,686.00	10.500,686.00	9,773,896.70	93.07
04		கம்பெரலிய வேலைத்திட்டம் (104-2-6-20-2506)	1,723,600,000.00	1,723,600,000.00	1,681,540,011.31	97.54
05		மீள்குடியேற்ற வேலைத்திட்டம் (104-2-14-30-2202)	120,469,665.00	120,469,665.00	108,683,621.00	90.03
06		மீள்குடியேற்ற வேலைத்திட்டம் (104-2-14-41-2205)	23,254,250.00	23,254,250.00	19,115,370.00	82.20
07		மீள்குடியேற்ற மக்களுக்கான வீடுகள் வேலைத்திட்டம் (104-2-14-44-2509)	150,000,000.00	150,000,000.00	141,585,461.41	94.38
